# மே 27

# புனித காந்தர்பரி அகுஸ்தீன் (-604)




இவர் உரோமையில் பிறந்தார். முதல் கிரகோரியார் என்னும் பாப்பு. அந்நாட்களில் திருச்சபையை ஆண்டு வந்தார். பிரிட்டன் நாட்டில் வாழ்ந்த அவிசுவாசிகள் கிறிஸ்தவ மறையைக் கைப்பற்ற விரும்புவதாக கிரகோரியார் அறிந்தார். அப்பொழுது அகுஸ்தீன் உரோமையில் புனித பிலவேந்திரர் மடத்தில் சந்நியாசியாய் வாழ்ந்து வந்தார். அனைவரையும், அவருடன் இருந்த 39 சந்நியாசிகளையம் இங்கிலாந்துக்கு அனுப்பினார். இதில் ஏராளமான சங்கடங்கள் உண்டு. என்றாலும் அகுஸ்தீனும் சந்நியாசிகளும் உடனே கீழ்ப்படிந்தனர். இங்கிலாந்துக்குச் சென்று வேதம் போதித்தார்கள். அவிசுவாசியான எதல்பர்ட் அரசன் இவர்களை வரவேற்றான். அவனுடைய மனைவி கிறிஸ்தவள். அவளது பெயர் பெர்த்தா. 596-ஆம் ஆண்டு பரிசுத்த ஆவியின் திருவிழா அன்று அரசரும் ஏராளமான மக்களும் ஞானஸ்நானம் பெற்றார்கள். பின்னர் இவர் பிரானஸ் நாட்டுக்குப் போய் ஆர்லஸ் நகர்ப் பேராயரால், ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். பின்னர் இவர் இங்கிலாந்துக்குப் போய், களைப்பையும் சலிப்பையும் கவனியாமல் உழைத்தார். இவரது பெரு முயற்சியால் கிறிஸ்தவ மறை இங்கிலாந்தில் ஸ்திரமாக ஊன்றப்பட்டது. சில ஆண்டுகள் திருச்சபையை ஆண்டு நடத்திய பின் 605-ஆம் ஆண்டில் இவர் உயிர் துறந்தார்.

**சிந்தனை:** இவர் இங்கிலாந்தின் அப்போஸ்தலர். திருச்சபையை விட்டுப் பிரிந்தவர்கள் நம்மிடம் வந்து சேரும்படி இவர் வழியாகக் கடவுளை மன்றாடுவோம்.

**செபம்:** ஆண்டவரே, திருச்சபையை விட்டுப் பிரிந்தவர்கள் மேல் இரக்கமாயிரும்.